www.xtrapapers.com

Cambridge International A Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Level

**TAMIL** **9689/21**

Paper 2 Reading and Writing **October/November 2017**

**1 hour 45 minutes**

INSERT

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passages for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் பயன்படுத்தவேண்டிய பத்தி இங்கே எழுதப்பட்டு இருக்கும்.

நீ இந்த இடத்தில் எப்படி எழுதவேண்டும் என்று உன் எண்ணங்களை இங்கே எழுதலாம்.
இதைத் தேர்வு அதிகாரி பார்க்க மாட்டார்.



DC (LK) 140356/2
© UCLES 2017

CAMBRIDGE International Examinations

www.xtrapapers.com



பகுதி 1

கட்டுரை **ஒன்றைப்** படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

## கழுகுகளின் வலிமை

கழுகுகள் மிக உயரமாகப் பறக்கும் திறமை கொண்டவை. அவை பறவைகளில் மிக சக்தி வாய்ந்தவை. இவை வலிமை மற்றும் தைரியத்தின் சின்னமாக இருக்கின்றன. ஆனால் கழுகுகளின் பறக்கும் திறமைகளும், வலிமையும், தைரியமும் பிறப்பிலேயே வருபவை அல்ல. அவை கழுகுகளால் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் கற்றுக் கொள்ளப்படுபவை தான்.

குஞ்சுகளாக இருக்கும் போது கழுகுகள் கூட்டில் தாய்ப் பறவையுடன் இருக்கும். கூட்டில் சுகமாகவும், பாதுகாப்பாகவும் பலவீனமாகவும் அவை வாழும். அவை அப்படியே பாதுகாப்பாக இருந்து விட்டால் வலிமையாகவும், சுதந்திரமாகவும் மாறுவது கடினம். குஞ்சுகளாக இருக்கும் போது வேண்டிய உணவளித்து, பாதுகாப்பாக வைத்திருக்கும் தாய்ப்பறவை குஞ்சுகள் பறக்க வேண்டிய காலம் வரும் போது அந்நிலையிலிருந்து மாறி விடுகிறது.

முதலில் கூடுகளில் மெத்தென இருக்கும் படுக்கையைக் கலைத்து, சிறு குச்சிகளின் கூர்மையான பகுதிகள் வெளிப்படும்படி செய்யும். கூட்டை தங்க வசதியற்றபடி செய்து விடுகின்றது. தன் சிறகுகளால் குஞ்சை அடித்து வெளியே விரட்டும். தாய்ப் பறவையின் இம்சை தாங்க முடியாமல், கழுகுக்குஞ்சு கூட்டின் விளிம்புவரை வந்து நிற்கும். பறக்கத் தெரியாத குஞ்சு கூட்டின் வெளியே உள்ள உலகத்தின் ஆழத்தையும், உயரத்தையும் விரிவையும் முதல் தடவையாக கண்டு பிரமிக்கும்

பெரிய, பிரம்மாண்டமான உலகத்தில் தனியாகச் செல்ல பயந்து, குஞ்சு பலவீனமாக நிற்கும். எல்லா குஞ்சுகளும் தன் வாழ்க்கையில் சந்தித்தாக வேண்டிய ஒரு நிகழ்ச்சி இதுவாகும். அந்த நேரத்தில் குஞ்சு கூட்டிலேயே தங்கி விட்டால் என்றுமே பறக்கக் கற்றுக் கொள்ளாது. சுயமாகப் பறப்பது கழுகுக்கு நீண்ட காலம் வாழ்வதற்கு உதவும் என்பதைத் தாய்ப்பறவை அறியும்.

கழுகுக்குஞ்சு கூட்டின் விளிம்பில் என்ன செய்வதென்று அறியாமல் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டு இருக்கும் போது, தாய்ப்பறவை குஞ்சின் உணர்வுகளை லட்சியம் செய்யாமல் குஞ்சை கூட்டிலிருந்து வெளியே தள்ளி விடும். அப்போது, கழுகுக்குஞ்சு கஷ்டப்பட்டு சிறகடித்துப் பறக்க முயற்சி செய்யும். குஞ்சு காற்றில் சிறகடித்துப் பறக்க முடியாமல் கீழே விழ ஆரம்பிக்கும் நேரத்தில் தாய்க்கழுகு வேகமாக வந்து தன் குஞ்சைப் பிடித்துக் கொள்ளும். சிறிது நேரத்தில், குஞ்சைப் பிடித்துக் கொண்டு வானுயரப் பறந்து சென்று மீண்டும் அந்தக் கழுகுக்குஞ்சை அந்தரத்தில் பறக்க விட்டு விடும். இப்போது, மறுபடி காற்று வெளியில் சிறகடித்துப் பறக்க வேண்டிய கட்டாயத்திற்கு அந்தக் குஞ்சு உள்ளாகிறது.

இப்படியே குஞ்சை வெளியே தள்ளி விடுவதும், காப்பாற்றுவதுமாகப் பல முறை நடக்கும் இந்தப் பயிற்சியில் கழுகுக் குஞ்சின் சிறகுகள் பலம் பெறுகின்றன. காற்று வெளியில் பறக்கும் கலையை கழுகுக்குஞ்சு கற்றுக் கொள்கிறது. அது சுதந்திரமாக, ஆனந்தமாக, தைரியமாக வானோக்கிப் பறக்க ஆரம்பிக்கிறது.

© UCLES 2017

www.xtrapapers.com



## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

**காகத்தின் கதை**

ஒரு காகம் பெரிய ஆலமரத்தின் உயரத்தில் தீய விலங்குகளிடம் இருந்து தன் முட்டைகளைக் காப்பாற்றுவதற்காக கூடு ஒன்று கட்டியது. காக்கைக்கு அதே ஆலமரத்துப் பொந்தில் பாம்பு ஒன்று வாழ்ந்து வந்தது தெரியாது. அப்பாம்பு, காகம் கூட்டைவிட்டு பறந்து போவதற்காகக் காத்து இருந்து, அதன் முட்டைகளை யாருக்கும் தெரியாமல் எப்போதும் சாப்பிட்டு வந்தது. காகம், முட்டைகள் எங்கே காணாமல் போகின்றன என்று தெரியாமல் அதைத் தேடிக் கொண்டு இருந்தது. ஒரு நாள் காகம், பாம்பு தன் முட்டைகளைச் சாப்பிடுவதைக் கண்டது. அதனால் பாம்பைப் பழி வாங்க நினைத்தது. ஆலமரத்தின் அருகில் ஒரு ஆறு ஓடிக் கொண்டு இருந்தது. அதில் மகாராணி நீராட வருவார். அப்படி ஒரு நாள் மகாராணி நீராட வரும் போது, ராணியின் முத்து மாலையை காகம் திருடிச் சென்றது. முத்து மாலையை காவலர்கள் கண்முன்னே திருடி வந்து, அதைப் பாம்பு வசிக்கும் பொந்தில் காகம் போட்டது. காவலர்கள் பாம்பை கொன்று, முத்து மாலையை எடுத்துச் சென்றனர். முதல் அச்சுறுத்தலான பாம்பிடம் இருந்து காகம் தப்பியது.

காகம், இனி தன் முட்டைகள் பத்திரமாக இருக்கும் என்று நினைத்தது. அதே மரத்தில் ஒரு குயிலும் கூடு கட்டி வாழ்ந்து கொண்டு இருந்தது. குயில் தந்திரமாக காக்காவின் முட்டையை எடுத்து விட்டுத் தன்னுடைய முட்டையை மாற்றி வைத்தது. இந்த உண்மை தெரியாத காகம், தன் முட்டை என்று நினைத்து அதனைப் பாதுகாத்து குஞ்சு பொரித்தது. சிறு வயதில் குயில் குஞ்சு காகம் குஞ்சு போல இருக்கும், இதை அறியாமல் காகம் குயில் குஞ்சை அரவணைத்து, பாதுகாத்து வளர்த்தது. ஆனால், கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, குயில் குஞ்சு பாடிய போது, தான் ஏமாந்து விட்டதைக் காகம் அறிந்து குயில் குஞ்சைத் தன் கூட்டை விட்டு விரட்டியது. ஆண் பறவை அல்லது கூட்டத்தைச் சேர்ந்த மற்ற பறவைகள், குஞ்சுகளுக்கு உணவைத் தேடிக் கொண்டு வந்து தாய்ப் பறவையிடம் கொடுக்கும். குஞ்சுகளின் சிறகு முளைத்தவுடன், சுதந்திரமாக பறந்து வாழவேண்டும் என்பதற்காக தாய் பறவை குஞ்சுகளை கூட்டிலிருந்து வெளியே அனுப்புகிறது. குஞ்சுகள் தன் கூட்டத்தின் அருகில், மற்ற பறவைகளுடன் சேர்ந்து வாழும். ஒரு குடும்பத்தில் இருக்கும் பறவை மற்ற குடும்பத்து பறவைகளிடம் உரையாடி கூட்டமாக வாழும். உணவை மற்ற பறவைகளுடன் சேர்ந்து பகிர்ந்து உண்ணும். காகம் வானுயரப் பறப்பதற்காகவோ, வலிமையாக நீண்ட காலம் வாழ்வதற்காகவோ தன் குஞ்சுகளுக்கு பயிற்சி அளிக்காது.

ஒவ்வொரு பறவையும், தன் குஞ்சுகளையும் முட்டைகளையும் பத்திரமாக பார்த்துக் கொள்ள நினைக்கும். அதற்காக இந்த உலகத்தில் உள்ள மற்ற உயிரினங்களிடம் சில நேரங்களில் சண்டையிடும், அல்லது சாதுர்யமாகத் தந்திரம் செய்யும், அல்லது எதிரியை கண்டு ஒளிந்து கொள்ளும். அதன் பலம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல முடிவு செய்யும். இப்படிச் செய்யாவிட்டால், அந்த பறவையோ விலங்கினமோ அழிந்து போகும்.

இதைத் தான் சார்லஸ் டார்வின் என்ற விஞ்ஞானி, 'இயற்கைத் தேர்வு மூலமாக உயிரினங்களின் தோற்றம்' என்ற தத்துவத்தை எடுத்து உரைத்தார். உயிர் வாழ்தற்காக எல்லா உயிரினங்களும் போராடும். அதன் இனத்தை விருத்தி செய்வதற்காக எல்லா காரியங்களையும் செய்யும், மற்ற விலங்குகளைக் கொல்லவும் தயங்காது. நல்ல பலசாலியான மற்றும் அதிக தந்திரமான விலங்குகள் பிழைத்துக் கொள்ளும். மற்ற அனைத்தும் அழிந்து போகும்.

www.xtrapapers.com



**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2017